*S.*டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி ,
விச்சூர் போஸ்ட்,
சென்னை – 600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**

*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*
*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260

TAMIL

# *The Spoken Word*

*by*

*WILLIAM MARRION BRANHAM*

## சகோ. பிரான்ஹாம் அவர்களின் ஜீவியத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள்

1909 -ம் ஆண்டு முதல் 1965 -ம் ஆண்டு வரை.......

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**“உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து”**

நடத்தப்பட்டது. இறுதியாக ஜனங்கள் ஒருவர் மேல் ஒருவர் கைகளை வைத்து ஒரு பொதுவான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

சகோ. பிரான்ஹாம் வார்த்தையை போதித்து, வியாதியஸ்தருக்காக ஜெபித்து விட்டு மேடையை விட்டு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் கட்டிடத்தை விட்டு செல்லும் முன்பு, வில்லியம் உப்ஷா ஊன்றுகோலின்றி (crutches) நடந்து செல்வதாக சகோ. பிரான்ஹாம் ஒரு தரிசனம் கண்டார். இத்தரிசனத்தை கேட்ட உடனே கல்வாரி டெம்பிள் சபையின் மேய்ப்பரான லிராய் கோப், "சகோதரன் பிரான்ஹாம், காங்கிரஸ்காரர் (வில்லியம் உப்ஷா) சுகமடைந்து விட்டார் என்று கூறுகிறார்" என மேடையில் துரிதமாக சென்று கூறினார்.

உடனடியாக, 66 வருடங்களாக நடக்க முடியாமல் இருந்த உப்ஷா எழுந்து ஊன்றுகோல் எதுவுமின்றி நடக்கத் தொடங்கினார். அவர் தம்முடைய எஞ்சிய வாழ்நாளெல்லாம் தம்முடைய சொந்த கால்களாலேயே நடந்து தாம் அற்புத சுகமடைந்ததைக் குறித்து தேசம் முழுவதும் சாட்சி கூறினார். அவர் 1952–ம் ஆண்டு நவம்பர் 21–ம் நாள் மரித்தார்.


சகோ. பிரான்ஹாம் 1951–ம் வருஷம் ஜூலை மாதம் 19–ம் தேதி பிரசங்கித்த, "எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? (Who Hath Believed Our Report?)" என்ற செய்தியில், காங்கிரஸ்காரர் உப்ஷா அவர்கள் சுகமடைந்ததைக் குறித்து பின்வருமாறு கூறினார்:

"கர்த்தருடைய தூதன் என்னை சந்தித்து என்னிடம், " நீ மகத்தான மனிதர்களுக்கும். அரசியல்வாதிகளுக்கும் (Statesmen), பூமியின் இராஜாக்களுக்காகவும் ஜெபிப்பாய்" என்று கூறின மனிதர்களில் அவரும் ஒருவர் என்று நான் உணருகிறேன்"

"Only Believe" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

## சகோ. பிரான்ஹாம் அவர்களின் ஜீவியத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள்

### 1909 -ம் ஆண்டு முதல் 1965-ம் ஆண்டு வரை...



**1909 –ம் ஆண்டு :** ஏப்ரல் 6 : வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்கள் கென்டக்கியில், சார்லஸ் அவர்களுக்கும் எல்லா பிரான்ஹாம் (Ella Branham) அவர்களுக்கும் மகனாக பிறந்தார்.

(என் சுயசரிதை 50–0820A)

**1912 –ம் ஆண்டு :** பிரான்ஹாம் அவர்கள் தாம் நியூ ஆல்பெனிக்கு அருகில் உள்ள ஒரு பட்டணத்தில் வசிப்பார் என்று ஒரு சிறு பறவை தம்மிடம் கூறியதாக கூறிக் கொண்டு அலறியபடியே வீட்டிற்குள் ஓடினார்.

(என் சுயசரிதை 59–0419A)

**1916 –ம் ஆண்டு :** வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் ஒரு பாலம் உடைந்து 16 மனிதர்கள் ஆற்றிற்குள் விழுந்து மரித்துப் போவதாக தன்னுடைய முதல் தரிசனத்தை கண்டார்.

(ஆரம்பகால ஆவிக்குரிய அனுபவங்கள் 52–0713 A)

**1923 –ம் ஆண்டு :** வில்லியம் பிரான்ஹாம் தம்முடைய உறவினர் ஜிம்மி பூல் என்பவரால் எதிர்பாராவிதமாக தம்முடைய காலில் சுடப்படுகிறார். அவர் ஏறக்குறைய தம்முடைய ஜீவனை

இழந்து விட்டிருந்தும் தேவன் அவருக்கு ஒரு இரண்டாம் வாய்ப்பை அருளுகிறார்.

(இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள் 63–1110 M)



**1927 –ம் ஆண்டு :** வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் 1927–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரிசோனாவுக்கு செல்கிறார். மீண்டும் அவர் இந்தியானாவுக்கு திரும்பி வர விரும்பவில்லை, ஆனால் அவருடைய சகோதரன் எட்வர்ட் டிசம்பர் மாதத்தில் மரித்த போது மேற்குக்கு செல்லும் விருப்பம் தடைபட்டது. ஆனால் தம்முடைய ஜீவியத்தின் எஞ்சிய நாட்களில் மேற்குக்கு செல்லும்படி அழைத்தல் தொடர்ந்து கொண்டு வந்தது. (என் சுயசரிதை 52–0720 A)

**1931–ம் ஆண்டு :** 1931–ன் இலையுதிர் காலத்தில், வில்லியம் பிரான்ஹாம் அவர்களுக்கு ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக தலைவலியும், மங்கிய பார்வையும், கலங்கின வயிறையும் பெற்றார். ஆனால் அவர் 1932–ம் வருஷம் அந்நிலையிலிருந்து சுகமாக்கப்பட்டார். (இரண்டாம் அற்புதம் 51–0729 E)

சகோ. பிரான்ஹாம் இந்த வருடத்தின் இலையுதிர் காலத்தில் கிறிஸ்துவுக்கு தம் ஜீவியத்தை ஒப்படைத்தார்.

(தெய்வீக அன்பும் இராஜாதிபத்திய கிருபையும் 56–0814)

**1932 –ம் ஆண்டு :**

சகோ. பிரான்ஹாம் அவர்கள் ஒரு பாப்டிஸ்ட் சபையின் ஊழியக்காரராக சகோ. ராய் டேவிஸ் அவர்களால் நியமிக்கப்படுகிறார்.

(தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்ளுகிறார் 57–0306)





வருஷங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டார். வில்லியம் உப்ஷா அவர்கள் 1932–ஆம் வருஷம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டார், ஆனால், அதில் தோல்வியடைந்தார்.

## உப்ஷா அவர்கள் அற்புத சுகம் பெறுதல்




அமெரிக்காவின் தெற்கத்திய பாப்டிஸ்ட் கன்வென்ஷன் கூட்டங்கள் நடந்து கொண்டிருந்த சமயத்தில், வில்லியம் உப்ஷா அவர்கள், சங்கை. ராய் டேவிஸ் மூலம் வில்லியம் பிரான்ஹாம் அவர்களின் ஊழியத்தைக் குறித்து கேள்விபட்டிருந்தார். 1951–ம் ஆண்டு லாஸ் ஏஞ்சலிஸில், கல்வாரி டெம்பிளில் பிப்ரவரி 8–ம் தேதி வியாதியஸ்தருக்காக வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் ஜெபித்துக்கொண்டிருந்த போது, அவர் சபையோர் முன்பு திரும்பி பின்வருமாறு கூறினார்:

வைக்கோல் போரிலிருந்து (குவியல்) விழுந்து தம்முடைய முதுகு உடைக்கப்பட்ட நிலையிருக்கும் ஒரு வாலிப மனிதரை நான் காண்கிறேன். நரைத்த மீசையும் கீழ்பகுதி மூக்கில் கண்ணாடியை அணிந்திருப்பவருமான ஒரு மருத்துவர் இந்த வாலிபருக்கு மருத்துவம் செய்கிறார், ஆனால் அதனால் பயனில்லை. இந்த இளைஞர் புத்தகங்கள் எழுதும் ஒரு பிரபலமான மனிதராக வளர்ந்திருக்கிறார். ஜனங்கள் அவரைப் பார்த்து கைதட்டுகின்றனர்.

வில்லியம் உப்ஷா தாம் சகோதரன் பிரான்ஹாமிடம் பேச விரும்புவதாக அங்கிருந்த ஒரு உதவியாளரிடம் கூறினார், எனவே ஒரு ஒலிப்பெருக்கி (microphone) அவரிடம் தரப்பட்டது. அவர், " என் மகனே, நான் ஒரு பையனாக இருந்த போதே விழுந்து காயப்பட்டேன் என்பது உனக்கு எப்படி தெரியும்?" என்று சகோ. பிரான்ஹாமிடம் கேட்டார்.

சகோ. பிரான்ஹாம், "ஐயா, அதை என்னால் உம்மிடம் கூறமுடியாது, நான் கண்டதை மட்டும் என்னால் கூறமுடியும்" என்று பதிலளித்தார்.



இருப்பினும் வில்லியம் உப்ஷா சுகமடையவில்லை. வில்லியம் உப்ஷா முன் வரிசையில் அமர்ந்துகொண்டிருக்க, ஜெப வரிசை தொடர்ந்து

## காங்கிரஸ்காரர் உப்சா தம்முடைய சாட்சியை லாஸ் ஏஞ்சலஸ், கலிபோர்னியாவில் விவரிக்கிறார்



நான் தற்போது எண்பத்து நான்கு வயதான வாலிபன். என்னை இரட்சித்து, ஏழு வருஷங்களாக படுக்கையில் கிடந்த என்னை எழுந்து நடக்கப் பண்ணினவரும், ஐம்பத்தொன்பது வருஷங்களாக நான் பயன்படுத்திய ஊன்றுகோல்களை என்னை விட்டு விலக்கி என்னை களிகூரப் பண்ணின வருமான கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஒரு நாளைக்கு மூன்று நான்கு தடவைகள் பேசுகிறேன். என்னை நடக்கப் பண்ணிய தேவனுக்கு மகிமை உண்டாகட்டும்!

(சபையோர் கைதட்டி களிகூருகின்றனர்)

நான் என்னுடைய சாட்சியை குறித்த இந்த துண்டு பிரதியை நாடாளுமன்ற மேலவை உறுப்பினருக்கும், ஜனாதிபதிக்கும், அவருடைய மனைவிக்கும், மேலும் இப்பொழுது இவ்வாரத்தில் இங்கிலாந்தின் இராஜாவுக்கும், வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும் அனுப்பவிருக்கிறேன். மேலும் இதில் ஒன்றை ஜோசப் ஸ்டாலின் அவர்களுக்கும் அனுப்பப்போகிறேன். தேவன் அவருடைய ஆத்துமாவின் மேல் இரக்கமாயிருப்பாராக!

செய்தி :– சாட்சி, லாஸ் ஏஞ்சலஸ், கலிபோர்னியா, மே 9, 1951

## வில்லியம் உப்சா அவர்களின் வாழ்க்கை வரலாறு




வில்லியம் உப்சா அவர்கள் தம்முடைய 18–வது வயதில் பண்ணையில் நிகழ்ந்த ஒரு விபத்தில் தம்முடைய இரு கால்களையும் இழந்தார். இதன் காரணமாக அடுத்த 7 வருடங்கள் படுத்த படுக்கையானார். இந்த விபத்து நடப்பதற்கு சிறிது முன்பாக, அவர் தம்முடைய இருதயத்தை கர்த்தராகிய இயேசுவுக்கு கொடுத்திருந்தார். அவருடைய வியாதிப் படுக்கையில் இருந்தவாறே செய்யுள்களையும், எழுச்சியூட்டும் கடிதங்களையும் சன்னி சவுத் (Sunny South) என்று அழைக்கப்படும் பத்திரிகையில் எழுதத் துவங்கினார். தம்முடைய திறமையான எழுத்தின் மூலம் அனேக வாசகர்களின் பிரியத்திற்கு உரியவரானார்.

இவ்வாறு கிடைத்த தொகையைக் கொண்டு, வில்லியம் உப்ஷா அவர்கள் மெர்ஷர் பல்கலைக்கழகத்தில் 1895–ல் சேர்ந்தார். அவர் 1918–ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் ஜனநாயக கட்சியின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் மீண்டும் 1920, 1922 மற்றும் 1924–ஆம்



**1933 –ம் ஆண்டு :**







June 11–ம் தேதி, வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் புதிதாக மனந்திரும்பியவர்களுக்கு ஒகியோ ஆற்றில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார். 17–வது நபருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த போது, ஒரு சத்தம், “மேலே பார்!” என்றது. அவர் மேலே நோக்கிப் பார்த்த போது, ஒரு விநோத ஒளி தம்மை நோக்கி வருவதைக் கண்டார், அந்த ஒளி அவருக்கு மேலாக வந்து நின்றது. ஒளி அவருடைய தலைக்கு மேலே நின்ற போது, ஒரு சத்தம், ‘இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானகன் அனுப்பப்பட்டது போல, நீ அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருப்பாய்’ என்று கூறியதை அவர் கேட்டார். இது அவருடைய ஜீவியத்தில் அக்கினி ஸ்தம்பம் இரண்டாம் முறையாக பிரத்தியட்சமாகுவதாகும்.

(எவ்விதமாக தூதன் என்னிடத்தில் வந்தார் 55–0117)

**1933 –ம் ஆண்டு :**






பிரான்ஹாம் கூடாரமானது 1933–ல் கட்டி முடிக்கப்பட்டது. அது

ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்காவில் எய்த் அன்ட் பென் தெரு கோடியில் கட்டப்பட்டிருந்தது.

(தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்ளுகிறார் 57–0407M)

**1934 –ம் ஆண்டு :**





வில்லியம் பிரான்ஹாம் செப்டம்பர் 22–ல் ஹோப் பிரம்பாக்கை விவாகம் செய்கிறார். (என் சுயசரிதை 59–0419 A)

**1935 –ம் ஆண்டு :**

பில்லி பால் பிரான்ஹாம் செப்டம்பர் 13–ல் பிறக்கிறான் (என் சுயசரிதை 50–0820 A)





**1936 –ம் ஆண்டு :**

ஷாரோன்ரோஸ் அக்டோபர் 27–ல் பிறக்கிறாள்

(என் சுயசரிதை 50–0820 A)

**1937 –ம் ஆண்டு :**





ஹோப் பிரான்ஹாமும் ஷாரோன் றோஸ்–ம் காசநோயால் மரிக்கிறார்கள்.

(நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை 50–0200)



**1965 –ம் ஆண்டு :**





டிசம்பர் 24–ல், சகோதரன் பிரான்ஹாம் தம்முடைய 56–ம் வயதில் ஒரு கார் விபத்தில் மரணமடைகிறார்.

---

**வில்லியம் உப்சா அவர்களின் சாட்சி**





வில்லியம் டேவிட் உப்சா அவர்கள் அமெரிக்காவில் ஜார்ஜியாவிலுள்ள அட்லாண்டா விற்கு அருகில் 1866–ம் ஆண்டு அக்டோபர் 15–ம் நாள் பிறந்தார். அவர் 1910–ம் ஆண்டு முதல் 1920–ம் ஆண்டு வரை காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து உழைத்தார். 1932–ல் ஜனாதிபதி அலுவலகத்தில் பணி செய்தார். உப்சா பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு 66 வருஷங்கள் கழிந்த பிறகு, அவருடைய 84–வது வயதில், சகோ. வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் உப்சா சுகமடைந்து நடந்து செல்வதாக தரிசனம் கண்டார். அவர் உடனடியாக குணமடைந்து, தம்முடைய எஞ்சிய நாட்களில் முழுவதுமாக தம்முடைய கால்களைக் கொண்டே நடந்தார்.

அவர் தம்முடைய 86–வது வயதில் தாம் மரிப்பதற்கு முன்பாக தாம் அற்புதமாக குணமடைந்ததை குறித்த தம்முடைய சாட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்களுக்கும், பிரதிநிதிகளின் சட்டசபை குழு உறுப்பினருக்கு, ஜனாதிபதி ட்ரூமனுக்கும், வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும், இங்கிலாந்து மன்னர் ஜார்ஜ்–க்கும், ஜோசப் ஸ்டாலினுக்கும் அனுப்பினார்.



வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் ஏழு முத்திரைகளின் வெளிப்பாட்டைப் பெறுகிறார். ஏழு முத்திரைகளின் வெளிப்பாட்டை அவர் மார்ச் 16 முதல் மார்ச் 24 வரை பிரசங்கிக்கிறார்.



வில்லியம் பிரான்ஹாம் காட்டலினா மலையில் இராஜாவின் பட்டயத்தைப் பெறுகிறார்.

(ஏழாம் முத்திரை 63–0324 E)

**1963 –ம் ஆண்டு :**



வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் இந்த நவீன நாளில் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததற்காக குற்றப்படுத்துகிறார்.

(குற்றச்சாட்டு 63-0707M)



நவம்பர் 27–ல் சகோதரி மேடா பிரான்ஹாம் ஒரு கட்டியில் இருந்து சுகம் பெறுகிறார்

(சாட்சி 63–1128M)

**1964 –ம் ஆண்டு :**

சகோதரன் பிரான்ஹாம் அவர்கள் மார்ச் 1964–ல் டல்லாஸ், டெக்ஸாஸில் W.V. கிரான்ட் கூடாரத்தின் முன்பு நின்று எடுக்கப்பட்ட புகைப்படம்.



அவருடைய வலது தோள் பட்டையின் மீது அக்கினிஸ்தம்பம் இருப்பதை கவனியுங்கள். கர்த்தருடைய தூதன் எப்போதும் தம்முடைய வலது பக்கத்தில் நின்று கொண்டிருப்பதாக சகோ. பிரான்ஹாம் கூறினார்.



**1941 –ம் ஆண்டு :**



அக்டோபர் 23–ல் வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் மேடாபிராயை விவாகம் செய்கிறார்.

(ஆறாவது முத்திரை 63–0323)

**1946 –ம் ஆண்டு :**



வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் ஒரு தூதனை ஒரு குகையில் சந்திக்கிறார். தூதனிடமிருந்து கட்டளையைப் பெற்றுக் கொண்டு தெய்வீக சுகமளித்தலின் வரத்தை உலக ஜனங்களிடம் கொண்டு செல்கிறார்.

(எவ்விதமாக தூதன் என்னிடத்தில் வந்தார் 55–0117)



ரெபேக்கா பிரான்ஹாம் மார்ச் 21–ல் பிறக்கிறாள்

(இதை விசுவாசிக்கிறாயா? 51–0506A)

**1948 –ம் ஆண்டு :**

தூதன் குகையில் அறிவித்த இரண்டாம் அடையாளம் வெளிப்படுகிறது. அதாவது ஜனங்களின் இருதயங்களை பகுத்தறிதல்.



**1950 –ம் ஆண்டு :**

கரி ஹோல்மா என்ற இந்த பையன் ஏப்ரல் மாதத்தில் பின்லாந்தில் மரித்து பின் உயிரோடு எழுப்பப்படுகிறான்.

( மூன்று சாட்சிகள் 51–0728 )



பின்லாந்தில் யுத்தத்தில் அனாதையாக்கப்பட்ட வீரா இஹலைன் என்ற சிறுமி ஊன்றுகோல் எதுவுமின்றி நடந்தாள்.

(இப்பொழுது விசுவாசிக்கிறாயா? 53–1106)



ஹூஸ்டன், டெக்ஸாஸில், சகோ. பிரான்ஹாமின் தலைக்கு மேல் காணப்படும் அக்கினி ஸ்தம்பம் புகைப்படம் எடுக்கப்பட்டது.

(நாங்கள் இயேசுவை காண விரும்புகிறோம் 54–0314)



ஆறாம் ஜார்ஜ் மன்னர் சுகமாக்கப்படுகிறார்
(My Commission 51-0505)


மே மாதத்தில் தென் ஆப்பிரிக்காவில் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் ஷிர்லா காசநோயில் இருந்து சுகமாக்கப் படுகிறார். இவர் புகழ்வாய்ந்த பிரிட்டனை சேர்ந்த பிளாரன்ஸ் நைட்டிங்கேலின் தூரத்து உறவினர்.



( எங்கள் மூலமாய் கேள்வி பட்டதை விசுவாசித்தவன் யார்? 51–0719 )




**1962 –ம் ஆண்டு :**




ஜூன் மாதம் நடந்த இந்த கூட்டத்தில், வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் ஒரு ஸ்திரீயை நோக்கி, அவள் புற்றுநோயின் காரணமாக அவள் மரணத்தால் நிழலிடப் பட்டிருக்கிறாள் என்று கூறினார். அப்போது இந்த ஸ்திரீயை புகைப்படம் எடுக்க வேண்டுமென்று அவள் பக்கத்தில் இருந்த ஸ்திரீ தூண்டப்பட்டாள். புகைப்படம் எடுத்து, அதை டெவலப் (develop) பண்ணின போது, ஒரு கறுப்பு முகமூடி இந்த மரித்துக் கொண்டிருந்த ஸ்திரீயின் தலையை மூடிக் கொண்டிருந்தது

(ஜயன்மீர், இதுவா சமயம்? 62–1230 E)


**1963 –ம் ஆண்டு :**





ஜனவரியில், வில்லியம் பிரான்ஹாம் டூசான், அரிசோனாவுக்கு (மேற்கிற்கு) இடம் பெயர்கிறார்

(தேவன் ஒரு அருளப்பட்ட வழியை உடையவராயிருக்கிறார் 62–0728)





இந்த புகைப்படங்கள் வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் 1959, நவம்பரில் சான்ஜோஸ், கலிபோர்னியாவில் அவருடைய 9 நாள்கூட்டங்களின் போது எடுக்கப்பட்டது.

(மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசி 59–1120, உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசலை சுதந்தரித்துக் கொள்வார்கள் 59–1121, இது யார்? 59–1122, இந்தக்கன் மலையிடம் பேசு 59–1123, கீலேயாத்தின் பிசின் தைலம்59–1124, ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை 59–1125, அற்புதங்களின் யெகோவா 59–1126, குருடனான பர்திமேயு 59–1127, இருதயத்தின் வாசல் 59–1128, தேவனை காண்போம் 59–1129)

**1960 –ம் ஆண்டு :**



வில்லியம் பிரான்ஹாம்
காலத் திரைக்கு அப்பால்
செல்கிறார்.

(புறக்கணிக்கப்பட்ட இராஜா
60–0515 M)



**1951 –ம் ஆண்டு :**



மார்ச் 19–ல்
சாரா பிரான்ஹாமின் பிறப்பு.
(தேவனை விசுவாசித்தல் 52–0224)



மே மாதம் 2–ம் தேதி காங்கிரஸ்காரர் உப்ஷா சுகமடைகிறார்.
(நான் மோசேயோடு
இருந்தது போல 51–0503)





அனேகவருடங்கள் ஜெபித்த பிறகு, தேவன் தென் ஆப்பிரிக்காவில் கூட்டம் நடத்த வழி திறந்தார். அது அக்டோபரில் நடத்தப்பட்டது.

(விசுவாசம் ஆப்பிரிக்க பயண அறிக்கை 52–0725)

**1952 –ம் ஆண்டு :**

வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் தம்முடைய தென் ஆப்பிரிக்க பயணத்தின் போது, ஜோஹன்ஸ்பர்க்கில் தங்காமல்

இருந்த அவருடைய கீழ்ப்படியாமைக்காக அமீபாவினால் கடுமையாக பாதிக்கப்பட்டார்.

(ஆரம்பகால ஆவிக்குரிய அனுபவங்கள் 52–0713 A)

**1954 –ம் ஆண்டு :**

செப்டம்பரில், வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் இந்தியாவுக்கு செல்கிறார்

(தேவன் தம்முடைய வரங்களை ரூபகாரப்படுத்துகிறார் 52–0713 E)





**1955 –ம் ஆண்டு :**

May 19–ல் ஜோசப் பிரான்ஹாம் பிறக்கிறான்.

(பேழை 55–0522)

கார்ல்ஸ்ருகி, ஜெர்மனியில் நடந்த கூட்டத்தில் பிறவியிலேயே குருடான சிறு பெண் சுகமாக்கப்படுகிறாள்.

(தேவன் ஒரு அருளப்பட்ட வழியை உடையவராயிருக்கிறார் 56–0108)





வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் சான்ஜோஸ் இன்டியன் ரெசர்வேசனில் கூட்டங்களை நடத்துகிறார்.

(நம்பிடுவாய் பத்திரிகை – வால்யூம் 3, எண் 1)



**1956 –ம் ஆண்டு :**



மெக்ஸிகோ சிட்டியில், சகோ. பிரான்ஹாமின் கூட்டத்தில் கூடியிருந்த திரள் கூட்டத்தினரில் ஒரு பகுதி.

(நம்பிடுவாய் பத்திரிகை – வால்யூம் 1, எண் 3)

**1958 –ம் ஆண்டு :**



வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் லேக்போர்ட், கலிபோர்னியாவில் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, இந்த இரண்டு புகைப்படங்களும் எடுக்கப்பட்டன. முதல் புகைப்படம் அக்கினி ஸ்தம்பம் தோன்றுவதற்கு முன்னும், இரண்டாவது புகைப்படம் அக்கினி ஸ்தம்பம் தோன்றிய பின்பும் எடுக்கப்பட்டது

(வெளிப்படுத்தின விசேஷம் 4–ம் அதிகாரம் 61–0101)

**1959 –ம் ஆண்டு :**

அக்டோபரில் வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் பேசி, அணில்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன.

(இந்த கன்மலையிடம் பேசு 59–1123)

